நகராட்சி அலுவலகம்,

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி.

நாள் 26.10.2023

# சாதரணக் கூட்டம்

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி நகர்மன்றத்தின் சாதரணக்கூட்டம் எதிர்வரும் **2023**ம் வருடம் **அக்டோபர்** மாதம் **31 ம்** தேதி **செவ்வாய் கிழமை** காலை 10.30 மணியளவில் **நகர்மன்றத் தலைவர்** அவர்களின் தலைமையில் மன்றக் கூட்ட அரங்கில் வைத்து நடைபெறவிருக்கின்ற சாதரணக் கூட்டத்திற்கான கூட்டப் பொருள்

**பொருள் எண்.1**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் எண் TN 76 AW 3579 பத்தாயிரம் கி.,மீட்டருக்கு மேல் பயன்படுத்தப்பட்ட நிலையில், வாகனத்தின் நலன் கருதி பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என நகராட்சி ஓட்டுநரின் குறிப்பு பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில், மேற்கண்ட வாகனத்திற்கு பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 20000/-த்தினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட ஈப்பு வாகனம் எண் TN 76 AW 3579 ஆணையாளர் அவர்களின் பயன்பாட்டில் உள்ள வாகனம் என்பதாலும், வாகனம் 10 ஆயிரம் கி.மீட்டருக்கு மேல் பயன்படுத்தப்பட்ட நிலையில் , வாகனத்தினை பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண் 0021/2023/இ1

**தீர்மான எண் : 345 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண்.2**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் எண் TN 76 T 9612 பத்தாயிரம் கி.,மீட்டருக்கு மேல் பயன்படுத்தப்பட்ட நிலையில், வாகனத்தின் நலன் கருதி பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என நகராட்சி ஓட்டுநரின் குறிப்பு பெறப்பட்டுள்ளதின் அடிப்படையில், மேற்கண்ட வாகனத்திற்கு பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு, உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத் தொகையினை பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட ஈப்பு வாகனம் எண் TN 76 T 9612 நகர்மன்றத் தலைவர் அவர்களின் பயன்பாட்டில் இருந்து தற்போது நகராட்சி பொறியாளர் அவர்களின் பயன்பாட்டிற்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் மேற்கண்டவாகனம் 10 ஆயிரம் கி.மீட்டருக்கு மேல் பயன்படுத்தப்பட்டுள்ளதால், வாகனத்தினை பொது பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம் ந.க.எண் 0021/2023/இ1

**தீர்மான எண் : 346 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 3**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி கொட்டாரம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, ஓட்டன்குளம் இடைநிலை நீரேற்றும் நிலையம் மற்றும் வம்பளந்தான் பாறை தரைமட்ட நீர்தேக்கத்தொட்டியின் மூலம் இந்நகர் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. பொது மக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு கருதி, விநியோகம் செய்யப்படும் குடிநீரில், திரவகோளரின் கலக்க வேண்டி தேவையான திரவகுளோரின் கொள்முதல் செய்ய வேண்டி, இந்நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், அதற்கான செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ள வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு கருதி, திரவக்குளோரின் கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கும்,செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதற்கும் மன்றம் அனுமதி வழங்கலாம். ந-க.எண் 2381/2023/இ1

**தீர்மான எண் : 347 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 4**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 19 சாலையம்மன் கோவில் தெரு, முப்பிடாதியம்மன் கோவில் எதிர்புறம் உள்ள சிறுபாலம் மிகவும் தாழ்வாக உள்ளதால், மழைநீர் செல்ல இயலாமல் அருகில் உள்ள குடியிருப்புகளில் மழைநீர் புகுந்து விடுகிறது. எனவே அப்பகுதி பொது மக்கள் நலன் கருதி மேற்கண்ட இடத்தில் உள்ள சிறுபாலத்தினை மாற்றி அமைக்கவும், இந்நகர் பகுதியில் 21 வார்டுகளிலம் உள்ள வாறுகாலின் மேல் அமைக்கப்பட்டுள்ள இரும்பு மூடி சிதிலமடைந்துள்ளதால், வாறுகாலின் மேல்பகுதி திறந்த நிலையில் பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பு அற்ற நிலையில் உள்ளது.எனவே மேற்கண்ட திறந்த நிலையில் உள்ள இடங்களில் சிமெண்ட் சிலாப் அமைக்கும் பணி மேற்கொள்ளவும் நகராட்சி பொறியாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 4.70 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவேண்டியும், மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொதுமக்கள் நலன் கருதியும், பணியின் அவசியம் கருதியும். வார்டு எண் 19 ல் உள்ள சிறுபாலத்தினை மாற்றி அமைக்கவும் மற்றும் வாறுகாலின் உள்ள சிமெண்ட் சிலாப் அமைக்கும் பணி மேற்கொள்ளவும் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி வழங்கலாம் ந-க.எண் 2389/2023/இ1

**தீர்மான எண் : 348 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 5**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி எல்கைக்குட்பட்ட 21 வார்டுகளுக்கு நாள் தோறும் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. குடிநீர் விநியோகம் செய்ய பயன்படுத்தப்பட்டு வரும், கீழ்க்கண்ட விவரப்படியான மின் மோட்டர்களில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு, ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள இந்நகராட்சி பணி மேற்பார்வையாளர் அவர்களால் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும்,செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

1. பாபநாசம் பழைய சாலை முக்கூடல் உரை கிணறு – 20 ஹெச்பி (1+1)
2. ஒட்டன்குளம் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி – 30 ஹெச்பி (1+1)
3. டாணா மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி – 7.5 ஹெச்பி (1+1)
4. வம்பளந்தான் பாறை தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி – 7.5 ஹெச்பி (1+1
5. வம்பளந்தான் பாறை தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி – 5.0 ஹெச்பி (1+1
6. வம்பளந்தான் பாறை தரைமட்ட நீர்தேக்கத் தொட்டி – 3.0 ஹெச்பி (1+1

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட மின் மோட்டார்கள் தினசரி இயக்கப்பட்டு வரும் நிலையில், அவற்றில் ஏற்படும் பழுதுகளை உடன் சரி செய்து, பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பதின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். ந-க.எண் 2389/2023/இ1

**தீர்மான எண் : 349 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 6**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி 21 வார்டு பகுதிகளுக்கும் இந்நகராட்சி தலையணை இயல்பு நீரேற்று நிலையம் மற்றும் பொதிகையடி சுத்திகரிப்பு நிலையத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்கண்ட குடிநீர் நீரேற்று நிலையங்களில் இயங்கி கொண்டிருக்கும் மின் விசைபம்புகள் முறையே 75 ஹெச்பி, 40 ஹெச்பி, 100 ஹெச்பி மற்றும் 5 ஹெச்பி என 4 எண்ணம் மற்றும் அதற்கான மாற்று மின் மோட்டார் (Standby) 4 எண்ணம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்கண்ட மின்விசைபம்புகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்யும் பொருட்டு, பராமரிப்பு பணி மேற்கொள்ள வேண்டி தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ. 5.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டியும் , செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மேற்கண்ட மின் விசைபம்புகள் தினசரி இயக்கப்பட்டு வரும் நிலையில், அவற்றில் ஏற்படும் பழுதுகளை உடன் சரி செய்து, பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டும் என்பதின் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகைக்கும், செலவினத்தை இந்நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம். ந-க.எண் 2389/2023/இ1

**தீர்மான எண் : 350 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 7**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக நகர்மன்றத் தலைவர் அவர்களின் ஈப்பு வாகனம் TN76 T 9612 ல் பொதுபராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | வேலையின் விவரம் | **M/S, RVR Motor Works Ambasamudram** | **M/S, NAMBI Motor Works Tirunelveli** | **M/S.Prabha Motor WorksAmbasamudram** |
|---|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் எண் TN 76 T 9612 ல் பொது பராமரிப்பு பணிகள் | Rs.67225/- Including labour charges | Rs.72710/- Including labour charges | Rs.75700/- Including labour charges |

**அலுவலகக்குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கெடுத்துள்ள **M/S, RVR Motor Works Ambasamudram**, என்பவரின்விலைப்புள்ளியை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 351 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 8**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக ஆணையாளர் அவர்களின் ஈப்பு வாகனம் TN76 AW 3579 ல் பொதுபராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | வேலையின் விவரம் | **M/S, RVR Motor Works Ambasamudram** | **M/S, NAMBI Motor Works Tirunelveli** | **M/S.Prabha Motor WorksAmbasamudram** |
|---|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக ஈப்பு வாகனம் எண் TN76 AW 3579ல் பொது பராமரிப்பு பணிகள் | Rs.19725/-Including labour charges | Rs.22350/- Including labour charges | Rs.21120/- Including labour charges |

**அலுவலகக்குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி கெடுத்துள்ள **M/S, RVR Motor Works Ambasamudram**, என்பவரின்விலைப்புள்ளியை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும், மன்றம் அனுமதி வழங்கலாம்

**தீர்மான எண் : 352 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 9**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள UPS online server மற்றும் மின் களம் ஆகியவை சப்ளை செய்ய வேண்டி 22.09.2023 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | **விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள UPS online server மற்றும் மின் களம் ஆகியவை சப்ளை செய்தல்**<br>மதிப்பீடு ரூ. 2.95 இலட்சம்<br>ந.க.எண் 2033/2023/இ1 | திரு.ஏ.எஸ்.எம்.,எலக்ட்ரிக்கல்ஸ் திருநெல்வேலி | 0.16% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு. ராஜ் விக்னேஷ் திருநெல்வேலி | 0.04% மதிப்பீட்டைவிட அதிகம் |

இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு.ஏ.எஸ்.எம்.,

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற எலக்ட்ரிக்கல்ஸ் திருநெல்வேலி. என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 353 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 10**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள ஜென்செட் அறையின் மேற்கூரை மாற்றி அமைக்க 22.09.2023 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்குப்பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | **விக்கிரமசிங்கபுரம் நகராட்சி அலுவலக வளாகத்தில் ஜென்ரேட்டர் அறை மேற்கூரை அமைத்தல் பணி**<br>மதிப்பீடு ரூ. 1.40 இலட்சம்<br>ந.க.எண் 2033/2023/இ1 | திரு. கே. ராஜா ஒப்பந்தக்காரர் விக்கிரமசிங்கபுரம் | 0.10% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திருமதி.சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.62% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே. ராஜா, விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , மன்ற அனுமதியை எதிர் நோக்கி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 354 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 11**

விக்கிரமசிங்கபுரம்நகராட்சி பகுதியில் உள்ள அமைந்துள்ள அம்பலவாணபுரம் மெயின்ரோடு, மூன்று விளக்கு மற்றும் டாணா பகுதி பேரூந்து நிலையத்தில் புதியதாக இருக்கை அமைத்தல் பணி மேற்கொள்ள 25.10.2023 அன்று வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம் நகராட்சி வார்டு எண் 21 அம்பலவாணபுரம் மெயின்ரோடு, வார்டு எண் 18 மூன்று | திரு. கே. ராஜா ஒப்பந்தக்காரர் | 0.05% மதிப்பீட்டைவிட |

| | | | |
|---|---|---|---|
| | விளக்கு, மற்றும் வார்டு எண் 13 டாணா பகுதி பேரூந்து நிலையத்தில் புதியதாக இருக்கை அமைத்தல் மதிப்பீடு ரூ. 2.16 இலட்சம் நக.எண் 2033/2023/இ1 | விக்கிரமசிங்கபுரம் | குறைவு |
| | | திருமதி.சுப்புலெட்சுமி ஒப்பந்தக்காரர் திருநெல்வேலி | 0.25% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. கே. ராஜா, விக்கிரமசிங்கபுரம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 355 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 12**

விக்கிரமசிங்கபுரம்நகராட்சி பகுதி பொதிகையடி தூய நீரேற்று நிலையம்,ஒட்டன்குளம் மற்றும் வம்பளந்தான் பாறை தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகளில் அமைக்கப்பட்டுள்ள திரவ குளோரின்(Liquid Chloronation Plant) ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | பணியின் பெயர் | ஒப்பந்தக்காரர் பெயர் | விலைவிகித விவரம் |
|---|---|---|---|
| 1 | விக்கிரமசிங்கபுரம்நகராட்சி பகுதி பொதிகையடி தூய நீரேற்று நிலையம்,ஒட்டன்குளம் மற்றும் வம்பளந்தான் பாறை தரைமட்ட நீர்தேக்கத் தொட்டிகளில் அமைக்கப்பட்டுள்ள திரவ குளோரின்(Liquid Chloronation Plant) ல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரிசெய்தல் மதிப்பீடு ரூ. 2.20 இலட்சம் நக.எண் 2033/2023/இ1 | எக்ஸ்லன்ட் குளோரின் சிஸ்டம், சங்கரன் கோவில் | 1,10% மதிப்பீட்டைவிட குறைவு |
| | | திரு . சிவா ஒப்பந்தக்காரர் | 0.28% மதிப்பீட்டைவிட அதிகம் |

**அலுவலகக்குறிப்பு**

வரபெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில்., குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தக்காரர் திரு. எக்ஸ்லன்ட் குளோரின் சிஸ்டம், சங்கரன் கோவில் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று , பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி க்லாம்

**தீர்மான எண் : 356 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 13**

திருநெல்வேலி மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 3326/2018/ஆ2 நாள் 29.08.2023 ல், தினகரன் நாளிதழில் ஆயுத பூஜையை முன்னிட்டு , தொழில்மலர் வெளியிடவுள்ளதகாவும், தங்கள் துறை சார்ந்த விளம்பரத்தினை, நிதிநிலமைக்கேற்ப வெளியிட வேண்டி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் வரப்பெற்ற கடிதத்தின் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் மேற்கண்ட தினகரன் நாளிதழ் மூலம் வெளியிடப்பட்ட, தொழில்மலரில் விளம்பரம் செய்த வகைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.32760/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் , விளம்பரம் வெளியிடப்பட்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

திருநெல்வேலி மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிததில் தெரிவித்துள்ளப்படி, தினகரன் நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்திற்கான பட்டியல் தொகை ரூ.32760/- மட்டும் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 357 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 14**

திருநெல்வேலி மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண் 3326/2018/ஆ2 நாள் 29.08.2023 ல், தினமலர் நாளிதழில் ஆயுத பூஜையை முன்னிட்டு , தொழில்மலர் வெளியிடவுள்ளதகாவும், தங்கள் துறை சார்ந்த விளம்பரத்தினை, நிதிநிலமைக்கேற்ப வெளியிட வேண்டி தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் வரப்பெற்ற கடிதத்தின் படி, விக்கிரமசிங்கபுரம் நகராட்சி மூலம் மேற்கண்ட தினகரன் நாளிதழ் மூலம் வெளியிடப்பட்ட, தொழில்மலரில் விளம்பரம் செய்த வகைக்கு வரப்பெற்ற பட்டியல் தொகை ரூ.21000/- மட்டும் இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் , விளம்பரம் வெளியிடப்பட்டமைக்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

திருநெல்வேலி மண்டல நகராட்சிகள் நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதத்தில் தெரிவித்துள்ளப்படி, தினமலர் நாளிதழில் வெளியிடப்பட்டுள்ள விளம்பரத்திற்கான பட்டியல் தொகை ரூ.21000/- மட்டும் வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண் : 358 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**பொருள் எண். 15**

விக்கிரமசிங்கபுரம் நகராட்சி பகுதியில் பயன்பாட்டில் உள்ள கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்கு, இந்நகர் பகுதியில் சேகரமாகும் கசடு கழிவுகளை கொண்டு சென்று சுத்திகரிப்பு செய்யப்பட்டு, உரமாக்கும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணிக்குறித்து இந்நகர் பகுதியில் உள்ள குடியிருப்புகள்., வனிக வளாகங்கள், திருமணமண்டபங்கள் மற்றும் இதர நிறுவனங்களில் சேகரமாகும் கசடு கழிவுகளை, திறந்த வெளியில் கொட்டுவதை தவிர்கவும், அதனை பாதுகாப்பாக அப்புறப்படுத்தி, பயன்பாட்டில் உள்ள கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையத்திற்கு கொண்டு சென்று சுத்திகரிப்பது குறித்தும் பொது மக்களிடயே விழிப்புணர்வு ஏற்படுத்தவும், மேற்கண்ட கழிவுகளை தவறான முறையில் கையாழ்வது குறித்த புகர்கள் மற்றும் அதன் விவரங்கள் அறியும் பொருட்டு, அரசாணை எண் 1 நாள் 02.01.2023 ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, இலவச சேவை எண் 14420 குறித்த விழிப்புணர்வினை இந்நகர் பகுதியில் உள்ள பொது மக்களுக்கு தெரிவிக்கும் பொருட்டு விளம்பர பதாகைகள், ஸ்டிக்கர் மற்றும் துண்டு பிரச்சுரம் அச்சிட்டு வழங்க வேண்டி உத்தேச செலவினத் தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டியும், இச்செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திட வேண்டியும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

பொது சுகாதார அவசரம் மற்றும் அவசியம் கருதி, மேற்கண்ட இலவச சேவை எண் 14420 குறித்த விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகைக்குரிய செலவினம் என்பதால் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**தீர்மான எண் : 359 / மன்றம் அனுமதிக்கப்பட்டது**

**ஓம்/- திரு.எஸ்.பி.எம்.செல்வசுரேஷ்பெருமாள்**
**நகர்மன்றத் தலைவர்**
**விக்கிரமசிங்கபுரம் நகராட்சி**

This document was created with the Win2PDF “Print to PDF” printer available at

https://www.win2pdf.com

This version of Win2PDF 10 is for evaluation and non-commercial use only.
Visit https://www.win2pdf.com/trial/ for a 30 day trial license.

This page will not be added after purchasing Win2PDF.

https://www.win2pdf.com/purchase/